In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No. 49/2021 | Prosecution witness P.W.11

Name: Dr. Syed Abdul Kadar | Calling:

Father Name: | Religion:

Village: | Caste:

Taluk: | Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 01-04-2025.

**(Accused absent, petition u/s 355 BNSS. filed and allowed,)**

முதல் விசாரணை :-

நான் தற்போது மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் முதுநிலை மருத்துவ அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 17.05.2020ம் தேதி அதிகாலை 6.20 மணியளவில் திண்டுக்கல், நிலக்கோட்டை தாலுகா, மவுத்தன்பட்டியில் வசித்து வரும் செண்பகமூர்த்தியின் மகன் செண்பகராஜா, வயது 31 என்பவரை அவரது உறவினர் இளையராஜா என்பவர் 108 ஆம்புலன்ஸ்TN-20-G-1437 என்ற வாகனத்தின் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். ரெபர் செய்யப்பட்ட ஏ.ஆர்.எண்.767321 நாள் 17.03.2020ம் தேதி பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டின் மூலம் என்னிடம் அழைத்துவரப்பட்டார். அப்போது அவர் மயக்கநிலையில் காணப்பட்டார். நான் அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு இடது பக்க விலாவிலும், தலையின் பின்பக்கத்திலும் காயங்களுடன் இருந்தார். அவருக்கு முதலுதவி செய்து உள்நோயாளியாக மேல்சிகிச்சைக்காக வார்டில் தீவிர அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதித்தேன். நான் வழங்கிய விபத்து பதிவேடு அதசாஆ.9. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-

விபத்து பதிவேட்டில் எத்தனை மணிக்கு சம்பவம் நடந்ததாக

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடப்படவில்லை. கூட்டிவந்த இளையராஜாவிடம் சம்பவம் எப்போது நடந்தது என நான் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. மேற்படி காயம் இருசக்கரவாகனத்திலிருந்தோ, மாடியிலிருந்தோ கீழே விழும்போது ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரியல்ல. பின்தலையில் காயம் ஏற்பட்டது சம்மந்தமாக ஸ்கேன் எடுப்பதற்கோ, நுண்கதிர்படம் எடுக்க நான் அறிவுறுத்தினேனா என்றால் இல்லை. உள்நோயாளியாக மட்டும் அனுமதித்தேன். நான் சொன்ன நேரம், விதத்தில், காயம்பட்ட நபர் மருத்துவமனைக்கு வரவில்லை என்றும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.04.01 14:59:48 +0530

Principal District Judge,
Dindigul.